சுருக்கம்

பழங்குடியினர் நலம் – 2014–2015 ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் பணிகளுக்கான திட்டத்தினை செயல்படுத்த ரூ.922.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது – அரசு கணக்கில் திரும்ப செலுத்தப்பட்டது – 2015–2016 ஆம் ஆண்டிற்குரிய நிதியொதுக்கத்தில் பணிகளை மேற்கொள்ள ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2)) துறை

அரசாணை (ப) எண்.53 நாள் 01.03.2016

மன்மத வருடம் மாசி 18
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது

1. அரசாணை(ப) எண். 68, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(பமே1(2) துறை, நாள் 18.03.2015.
2. பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் ந.க.எண். பமே/அ2/2327/2014, நாள் 14.10.2015.
3. அரசு கடித எண் 6667/பமே1/2015–5, நாள் 15.02.2016.
4. இயக்குநர், பழங்குடியினர் நலம் கடித எண் பமே/அ2/2327/14, நாள் 18.02.2016.

*************

ஆணை :-

2014–2015 ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 2015–16 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.50.00 கோடியில் திட்டங்களைச் செயல்படுத்த இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களிடம் கருத்துரு கோரப்பட்டது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2014–2015 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணிகளை செயல்படுத்த முதல் கட்டமாக ரூ.1258.30 இலட்சத்திற்கு (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது. இதில் வனத்துறைக்கு ரூ.922.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடிதத்தில் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் வாயிலாக 2014–2015 ஆம் நிதியாண்டில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டிற்காக வனத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்காக ரூ.922.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு இத்தொகைக்கான வங்கி வரைவோலை வனத்துறைக்கு அனுப்பப்பட்ட போது பணம் ஆண்டு இறுதியில் பெறப்பட்டதால் 2014–15–ம் ஆண்டில் திட்டங்களை செயல்படுத்த இயலாது என்றும், இத்திட்டத்தை 2015–2016–ல் செயல்படுத்தவும், மேற்காணும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.922.50 இலட்சத்திற்கு Fund Availability Certificate அரசிடம் பெற்று வழங்குமாறு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் கோரியுள்ளதாக தெரிவித்திருந்தார்.

4. இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தது. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் நிதியாண்டில் வனத்துறை மூலம் செயல்படுத்திட ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.922.50 இலட்சம் மதிப்பிலான பணிகளை நடப்பு நிதியாண்டில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கத்தில் மேற்கொள்ள வனத்துறைக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே ஆணையிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள உரிய ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 – பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் JA – விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 16 – பெரும் பணிகள்.
(த.தொ.கு.4225–02–796–JA 1602)

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி 2015–2016 ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. முறையான ஒப்பந்தபுள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பிறகு தொகையினை பெற்று முதன்மை தலைமை வனப் பாதுகாவலர், சென்னை அவர்களுக்கு வழங்க இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும் மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகை கடன் சான்றின் (Letter of credit) மூலம் வழங்கப்பட வேண்டும் என பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மேலும், இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்கள் 2015–2016 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோரப்பட்டுள்ள கருத்துருவினை அரசிற்கு அனுப்பும்பொழுது மேலே பத்தி 4–இல் 2015–2016 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கத்தில் வனத்துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.922.50 இலட்சத்தினை கழித்தல் செய்து தக்க கருத்துருவினை அரசிற்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.14618/ஆதி(ம)பந/2016–1, நாள் 29.02.2016–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சேப்பாக்கம்,
சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
சைதாப்பேட்டை, சென்னை – 15.
மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம்.

மாநிலக்கணக்காய்வுத் தலைவர்,
சென்னை – 18/6/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 8.
நகல்
நிதி (ஆதி(ம)பந) துறை, சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 5) துறை, சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜா. தங்கம்
1.3.16
பிரிவு அலுவலர்.